அ.வ.எண்: 58/2014 நாள்: 14.10.2025

வா.சா.5 – மெய்யப்பன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>1, 2, 4, 5, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் தாவா வழக்கை தாக்கல் செய்யும்பொழுது இந்தியாவில் இல்லை என்றும் மலேசியாவில் தான் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். முதலில் தாவா வழக்கை என் மனைவி தான் தாக்கல் செய்தார் என்றும் பின்பு 4, 5 வருடங்கள் கழித்து தான் என்னை தரப்பினராக சேர்த்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு நான் என் மனைவிக்கு பவர் எதுவும் எழுதிக் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மனைவி தரப்பில் எத்தனை சாட்சிகளை விசாரித்துள்ளார்கள் என்றும் எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பூமிநாதன் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்கள் குறித்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.
2. தாவா வழக்கில் என் தரப்பில் யார் யாரை சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் இரண்டு ஓட்டு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஓட்டு வீடுகளும் ஒன்று சேர்ந்து கட்டப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்ற

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:07:48 +0530

ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஓட்டு வீடுகளும் 1996 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வீடுகளிலும் ஒரு வீட்டில் SPMV என்ற எழுத்துக்களும் மற்றொரு வீட்டில் SPPM என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மனைவியின் இனிஷியலான RMV என்பதை மட்டுமே குறித்துள்ளோம்.

3. தாவா வீட்டை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்தால் என்ன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். தாவா வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமித்து அறிக்கை தாக்கல் செய்வதற்கான செலவுகள் அனைத்தையும் என் மனைவி தான் பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை உண்மை என்பதால் தான் என் மனைவி அதற்கான ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆட்சேபனையை எப்பொழுது தாக்கல் செய்தார் என்றால் 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை எப்பொழுது பார்வையிட்டார் என்றும் அறிக்கையை எப்பொழுது தாக்கல் செய்தார் என்ற விபரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. நான் தாவா பிராதை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தாவா பிராதில் தாவா சொத்தானது நஞ்சை நிலமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வீடு எதுவும் அதில் காட்டப்படவில்லை என்றும் சொன்னால்

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:07:59 +0530

சரிதான் அது நெல் அடிக்கும் களமாக பயன்பட்டு வந்தது. தாவா பிராதில் தாவா சொத்து சம்பந்தமான விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா பிராதில் எந்த இடத்திலும் தாவா சொத்தில் வீடுகள் உள்ளது என்ற குறிப்பிடவில்லை என்று சொன்னால் (சாட்சி பிராதை படித்துப் பார்த்தார்) சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்து சம்பந்தமாக என் சகோதரன் பூமிநாதன் என் மீது மற்றும் என் மனைவியின் மீது வேறு ஒரு வழக்கு தொடர்ந்து உள்ளார் என்றால் சரிதான் அது நாங்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு பொய்யாக சங்கதிகள் கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

5. மேற்படி வழக்கில் பூமிநாதன் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்தார் என்றும் அதில் அவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்த விபரமும் அதற்கு என் மனைவி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களானது ஆதியில் காடத்தி கிராமத்தை சேர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சின்னத்தம்பி என்பவருக்கு வள்ளி என்ற மனைவி இருந்தார் என்றால் சரிதான். மேற்படி சின்னத்தம்பி வள்ளி தம்பதியருக்கு முத்துராஜ் என்ற மகனும் ஜெயலட்சுமி என்ற மகளும் இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி வள்ளி மற்றும் ஜெயலட்சுமி நான் தாவா வழக்கில் 5, 6 பிரதிவாதிகளாக சேர்த்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சின்னத்தம்பி இறந்த பிறகு அவரது மனைவி மற்றும் மக்களுக்கு சரிசமமாக மூன்று பங்கு பாத்தியம் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:08 +0530

6. நானும் அல்லது தாவா சொத்தை எனக்கு கிரயம் கொடுத்த நபரோ சின்னத்தம்பி இடம் இருந்து நேரடியாக தாவா சொத்தை கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி சின்ன தம்பியின் மறைவிற்குப் பிறகு அவரது மனைவியான வள்ளி என்பவரிடமிருந்து ஜெயராமன் என்பவர் கிரயம் பெற்றதாக நான் தாவா வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஜெயராமன் எப்பொழுது தாவா சொத்தை கிரயம் பெற்றார் என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி ஜெயராமன் கிரயம் வாங்கிய பொழுது சின்னத்தம்பியின் மகன் மற்றும் மகள் இருவரும் மேஜர் ஆகி இருந்தார்கள் என்று சொன்னால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 ஆவணம் தான் மேற்படி ஜெயராமன் கிரயம் பெற்ற கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான்.
7. மேற்படி வாசாஆ.13 ஆவணத்தை வள்ளியும் அவரது மகன் முத்துராஜ் என்பவரும் சேர்ந்து எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி ஜெயராமன் வள்ளி இடமிருந்து எத்தனை சென்ட்டுகள் கிரயம் பெற்றார் என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் 6ம் பிரதிவாதியான ஜெயலட்சுமி கையெழுத்து செய்யவில்லை என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி ஜெயலட்சுமி என்பவர் முத்துராஜிற்கு மூத்த சகோதரியா அல்லது இளைய சகோதரியா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வள்ளி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரை எந்த காலத்திலும் நேரில் சந்தித்ததில்லை

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:18 +0530

என்றால் சரிதான். மேற்படி சின்னத்தம்பியின் குடும்பத்தார் அனைவரும் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி ஜெயராமன் கிரயம் பெற்ற அசல் கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை எந்த தேதியில் ஜெயராமனிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் 06.11.1995 அன்று கிரயம் பெற்றேன் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றேன் என்றால் 3500 ரூபாய்க்கு கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெறும் பொழுதும் தாவா சொத்தை நஞ்சை நிலமாக காட்டித்தான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் எப்பொழுது வீடு கட்ட ஆரம்பித்தோம் என்றால் 1996 ஆம் வருடம் ஆரம்பித்தோம் தேதி மாதம் நினைவில் இல்லை. அப்பொழுது நான் இந்தியாவில் தான் இருந்தேன் என்றால் சரிதான். யாரை வைத்து வீடு கட்டினோம் என்றால் குட்டி கொத்தனாரை வைத்து வீடு கட்டினோம்.

9. மேற்படி வீட்டை நான் எந்த வருடம் கட்டி முடித்தேன் என்றால் சுமார் 6, 7 மாதங்களில் கட்டி முடித்து விட்டேன். நான் எப்பொழுது வெளிநாடு சென்றேன் என்றால் 1996 ஆம் வருடம் சென்று விட்டேன் மாதம் நினைவில் இல்லை. எனது கடவுச்சீட்டை பார்த்தால் நான் எந்த மாதம் வெளிநாட்டிற்கு சென்றேன் என்று விவரம் தெரியவரும் என்றால் நான் கடவுச் சீட்டு இல்லாமல் வெளிநாடு சென்று அங்கு அபராதம் கட்டி திரும்பி வந்தேன். தாவா சொத்தில் உள்ள வீடுகள் வடக்கு தெற்காக உள்ளது என்றால் சரியல்ல கிழக்கு மேற்காக உள்ளது மேற்கு பார்த்த வாசல் வைத்துள்ளது. மேற்படி வீடுகளில் ஒரு வீட்டில் என்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:28 +0530

குடும்பத்தார்களும் மற்றொரு வீட்டில் பூமிநாதன் என்பவரின் குடும்பத்தார்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல இரு வீட்டிலும் என் குடும்பத்தார்கள் தான் வசித்து வருகிறார்கள்.

10. எனது கிராமத்தில் எனது வயதை ஒத்த பூமிநாதன் என்று பெயர் கொண்ட மற்ற ஒரு நபர் பிரதிவாதியை தவிர வேறு ஒருவர் இல்லை என்றால் சரிதான். தாவா பிராதில் என் முகவரியும் பிரதிவாதி பூமிநாதனின் முகவரியும் ஒரே முகவரியாக உள்ளது என்றால் சரியல்ல அது தவறாக சேர்க்கப்பட்டுள்ளது. தாவா வழக்கின் பிரதிவாதி மேற்படி முகவரியில் வசிக்காத பொழுது எதற்காக அவர் மீது தாவா வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் அவர் என் மனைவி மற்றும் மக்களை வீட்டை காலி செய்யுமாறு கூறி பிரச்சனை செய்தார் அதனால் தாவா வழக்கை தாக்கல் செய்தேன். பிரதிவாதி தாவா சொத்து முழுவதும் தனக்கு பாத்தியம் என்று கூறி பிரச்சனை செய்ததால் தான் நான் தாவா வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டா தற்போது 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

11. நான் யாருக்கும் மோசடி பத்திரங்கள் எழுதிக் கொடுப்பதில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 01.07.1996 ஆம் ஆண்டு நான் 1ம் பிரதிவாதி பூமிநாதனுக்கு ஆவண எண். 878/1996 ஆக எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் என்றால் நான் எழுதிக் கொடுக்கவில்லை அதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. பத்திரத்தில் உள்ள கைரேகையும் என்னிடம் மற்ற கைரேகைகளை பெற்று ஆய்வுக்கு அனுப்புவதில் எனக்கு

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:36 +0530

எந்தவித ஆட்சேபனையும் இல்லை. வீரையா மகன் செல்லையா என்பது யார் என்றால் என்னுடைய அக்காவின் கணவர் ஆவார். மெய்யப்பன் மகன் ஜோதிலிங்கம் என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தான ஆறு சென்ட் அளவுள்ள இடத்தை கிரயம் பெற்று அதில் மூன்று செண்டுகளை என் சகோதரருக்கு பதிவு செய்த கிரைய பத்திரம் மூலம் கிரயம் கொடுத்துவிட்டு தற்பொழுது கிரயம் கொடுக்கவில்லை என்று கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12. ஜெயராமன் பெற்ற கிரைய பத்திரத்தில் சின்னத்தம்பியின் மனைவி வள்ளி மற்றும் அவரது மகன் முத்துராஜ் ஆகியோர் மட்டும் கையெழுத்து செய்துள்ளதால் அவர் பெற்ற கிரையமானது 6ம் பிரதிவாதி ஜெயலட்சுமி இன் பாகத்தை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் பெற்ற கிரயத்தில் 4 செண்டுகள் கிரையம் தான் செல்லத்தக்கது என்றும் அதில் நான் மூன்று சென்டை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டதால் மீதமுள்ள ஒரு சென்ட் மட்டும் தான் எனக்கு பாதிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல._ 6ம் பிரதிவாதி ஜெயலட்சுமி என்பவரிடம் கிரயம் பெற்றுள்ளதால் அவருக்கு ஐந்து செண்டுகள் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்லபாவா சொத்துக்கு எந்த காலத்திலும் என் பெயரில் பட்டால் ஏற்பட்டது இல்லை என்று சொன்னால் சரிதான்.

13. நான் கிரயம் பெற்றதன் அடிப்படையில் தாவா சொத்திற்கான பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன் அதை மேற்கொள்ளும் பொழுது தான்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:45 +0530

பிரச்சனை வந்தது. மேற்படி நடவடிக்கைகள் குறித்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மனைவி தாக்கல் செய்திருப்பார் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு தற்பொழுது யார் பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வசிக்கும் வீட்டிற்க்கான வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் என் மனைவி பெயர்தான் உள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதி வசிக்கும் வீட்டின் மின் இணைப்பு எண் மற்றும் வரிவிதிப்பு எண் என்ன என்றால் மின் இணைப்பு எண் 243 ஆகும் வரி விதிப்பு எண் எனக்கு தெரியாது.

14. நான் வசிக்கும் வீட்டின் மின் இணைப்பு எண் என்ன என்றால் 243 ஆகும் இரு வீட்டிற்கும் சேர்த்து ஒரே மின் இணைப்பு எண் தான். அது என் மனைவி பெயரில் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் பக்கம் 2ல் தாவா சொத்தில் இரண்டு தனி தனி வீடுகள் உள்ளது என்றும் மேற்படி இரண்டு வீடுகளுக்கும் தனியான ஜன்னல் கதவுகள் உள்ளது என்றும் மற்றும் தனித்தனியாக மின் இணைப்பும் குடிநீர் இணைப்பும் உள்ளது என்றும் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வசிக்கும் வீட்டிற்க்கான மின் இணைப்பும் வரி விதிப்பும் என் மனைவியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் என் மனைவிக்கு எந்த விதமான பந்தக பாராதீனமும் செய்து எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:08:54 +0530

15. காந்தி என்பவர் என் மனைவியின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி காந்தி என்பவருக்கும் தாவா சொத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1, 2, 4, 5, 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.14 16:09:01 +0530